தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 12618/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

**முன்னிலை** — **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**
**மாநில தகவல் ஆணையர்.**

**மனுதாரர்:** — திரு G. பரசுராமன்,
2, D.K.M. தோட்ட தெரு,
விவேக் நகர், பெரிய அல்லாபுரம்
வேலூர் 632 002

**பொது அதிகார அமைப்பு:** — பொதுத் தகவல் அலுவலர்
தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்
வேலூர் 632 002..

***

மனுதாரர் திரு G. பரசுராமனும், பொது அதிகார அமைப்பின் சார்பாக வேலூர் தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய பொதுத் தகவல் அலுவலரும் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசார**ணைக்கு வந்திருந்தார்.**

மனுதாரர் 22.4..09 அன்று 4 இனங்களில் மனுதாரர் கட்ட வேண்டிய பாக்கி தொகை குறித்து தகவல்கள் கேட்டு மனு அனுப்பி உள்ளார். 18.5.09 அன்று மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாணையத்திற்கு 1.6..09 அன்று செய்த மேல் முறையீடு மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரரின் 24.2.09 மனுவிற்கு முழுத் தகவல்களும் வழங்கப்பட்டதாகவும், மேலும் சில கூடுதல் தகவல்கள் தேவைப்பட்டதால் 22.4.09 அன்று மீண்டும் தகவல் பெறும் உரிமைச்சட்டப்படி தகவல்கள் கேட்டிருப்பதாகவும் தெரித்தார்.

மனுதாரரின் முதல் மனுவிற்கு 4.3.09 அன்றும் இரண்டாவது மனுவிற்கு 18.5.09 அன்றும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. மனுதாரர் குறிப்பிட்டுள்ள சில விவரங்கள் இவ்வாணயத்திற்கு அனுப்பி உள்ள மனுவில் கேட்டுள்ளார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரிக்கப்பட்டது. மனுதாரருக்கு தகவல்கள் தரப்பட்டுள்ளதாகவும் மேலும் மனுதாரர் கேட்டுள்ள சில தகவல்கள் அலுவலக ஆவணங்களில் இருந்து விசாரணையின் போது மனுதாரருக்கு அளித்தார். மனுதாரருக்கு தகவல்கள் தரப்பட்ட போதிலும் மீண்டும் சில தகவல்கள் தேவைப்பட்டால் அவர் மீண்டும் தகவல் பெறும் உரிமைச்சட்டப்படி விண்ணப்பித்தால் அவர் கேட்கும் தகவல்கள் வழங்கப்படும் என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் அவருக்கு அளிக்கப்பட்டதால் இவ்வழக்கு இத்துடன் முடிவடைகிறது.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

உதவிப் பதிவாளர்

பொதுத் தகவல் அலுவலர்
தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்
வேலூர் 632 002..

திரு G. பரசுராமன்,
2, D.K.M. தோட்ட தெரு,
விவேக் நகர், பெரிய அல்லாபுரம்
வேலூர் 632 002